## 1.4 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து மாவட்ட ஊராட்சிகளுக்கு பணியாளர்கள் மாற்றம்

ஊரக வளர்ச்சி ( சி1) துறை

அரசாணை (நிலை) எண். 15 நாள் : 17.01.1997

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.100 ஊரக வளர்ச்சித் துறை, நாள். 13.04.1995
2. அரசு கடித எண்.32782/சி/96–1, ஊரக வளர்ச்சித்துறை, நாள். 15.10.1996
3. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண்.52476/பிசி1, நாள். 06.11.1990

**ஆணை**

பார்வையில் முதலாவதாக உள்ள அரசாணையில் மாவட்ட ஊராட்சிகளுக்கு திட்டங்களை ஒப்படைப்பது சம்பந்தமாக ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்ற பின்னால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளும் மாவட்ட ஊராட்சிகளும் தனித்தனி அமைப்புகளாக தற்போதைக்கு செயல்படும் என்றும், இதைப் பற்றி பின்னர் ஆய்வு செய்யப்படும் என்றும் பார்வையில் இரண்டாவதாக உள்ள கடிதத்தில் கூறப்பட்டது.

3. இந்நிலையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயல்படுத்தப்பட வேண்டிய வளர்ச்சித் திட்டங்களை மாவட்ட ஊராட்சிகள் செயல்படுத்துவது, இவ்விரு அமைப்புகளும் தனித்தனியே செயல்பட வேண்டும் என்ற நிலைக்கு முரணாக தோன்றுகிறது. எனவே, அரசு, ஊரக வளர்ச்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து, 13.04.95 நாளிட்ட ஊரக வளர்ச்சித்துறை ஆணை எண்.100–இல் பிறப்பிக்கப்பட்ட ஆணையை திருத்தும் வகையில் பின்வருமாறு ஆணையிடப்படுகிறது.

அ) பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் குறிப்பிடும் திட்டங்கள் தொடர்ந்து ஊரக வளர்ச்சி முகமையினால் செயல்படுத்தலாம், மற்றும் இத்திட்டங்களுக்கான நிதியினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்ற வேண்டியதில்லை.

ஆ) அவ்வரசாணையின் பிற்சேர்க்கை 1–இல் குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் தொடர்ந்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலேயே பணியாற்றலாம்.

இ) புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி செயல்படும் வகையில் கீழ்க்கண்ட குறைந்தபட்ச பணியாளர்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளிலிருந்து மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றலாம் என்றும் ஆணையிடுகிறது.

1) ஏதேனும் ஒரு உதவி திட்ட அலுவலர்

2) ஒரு உதவியாளர்

3) ஒரு இளநிலை உதவியாளர் அல்லது உதவி புள்ளியியல் ஆய்வாளர்

4) ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் அல்லது தட்டச்சர்

5) இரண்டு அலுவலக உதவியாளர்கள்

4. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் 08.11.1996 நாளிட்ட அ.சா.கு. எண்.4817/திஅ/5/96–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். நாராயணன்**
அரசு செயலாளர்